CIKS

# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஜனவரி 2010 மலர் 5 இதழ் 4

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## வேளாண்பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் இயற்கைவழி வேளாண்மைப் பயிலரங்கு

நமது மையம் வேளாண்பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் இயற்கைவழி வேளாண்மை என்ற தலைப்பில் பள்ளி ஆசிரியைகளுக்கு பயிலரங்கு ஒன்றை நவம்பர் 28ஆம் தேதியன்று நடத்தியது. சுக்கன்கொல்லையிலுள்ள தொழில்நுட்ப ஆதார மையத்தில் நடைபெற்ற இந்தப் பயிலரங்கில் சென்னையிலுள்ள ஒன்பது பள்ளிகளைச் சேர்ந்த 55 ஆசிரியைகள் கலந்து கொண்டனர். இதில் இயற்கைவழி வேளாண்மையின் அடிப்படைகள், கொள்கைகள் மற்றும் வேளாண்பல்வகைப் பாதுகாப்பு குறித்து விவரிக்கப்பட்டது. இதை தொடர்ந்து, பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் நமது ஆய்வுப் பண்ணையிலுள்ள பாரம்பரிய நெல் வயல்கள், செம்மை நெல் சாகுபடி வயல்கள், மாதிரி காய்கறி மற்றும் மூலிகைத் தோட்டங்கள், வேளாண் வனப்பகுதி, மண்புழு உரத் தயாரிப்பு கூடம், சாண எரிவாயு அமைப்பு, பசுமைக் குடில் மற்றும் நிழல் வலைக் கூடத்தைச் சுற்றி பார்த்தனர். பயிற்சியில் கலந்து கொண்ட ஒவ்வொரு பள்ளிக்கும் நமது வெளியீடுகளான "இயற்கைவழி உணவு மற்றும் சத்துணவு திட்டத்தில் இயற்கைவழி காய்கறிகள்" வழங்கப்பட்டன.



*செம்மை நெல் சாகுபடி நாற்றாங்காலைப் பார்வையிடும் ஆசிரியைகள்*

### மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரி அவசியமில்லை

**இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தினால் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்ட விளக்கம்**

சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு சமர்ப்பித்த விளக்கத்தில், கத்தரியில் ஏற்படும் காய் மற்றும் தண்டு துளைப்பான் பிரச்சினைகளுக்கு திருப்திகரமான வகையில் தீர்வு காண பாரம்பரிய அறிவும், ஆதாரங்களும் போதுமான அளவில் உள்ளது என்ற கருத்தை நமது மையம் முன்வைத்துள்ளது. இத்தகைய பாரம்பரிய தீர்வுகள் இந்திய வேளாண் ஆய்வுக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட "பாரம்பரிய தொழில்நுட்ப அறிவு" என்னும் ஆய்வுத்திட்டத்தின் கீழ் இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் (ICAR) வேளாண் பல்கலைக் கழகங்கள், க்ருஷி விக்யான் கேந்திரா (KVK) போன்ற ஆய்வு நிறுவனங்களால் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வயல்களில் நடைமுறைப்படுத்தப் பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது."

இந்த விளக்கத்தின் முழு விவரங்கள் மற்றும் ஒட்டிணைப்புகளை www.ciks.org/btbrinjal.html என்ற இணையதள இணைப்பில் சென்று பார்க்கவும்.

### புதிய திட்டம்

**மிளகாய் சாகுபடியில் இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதின் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் திட்டம்**

தமிழ்நாடு மாவட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குழு (Tamilnadu State Council for Science and Technology) "மிளகாய் சாகுபடியில் இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்களை நடைமுறைப் படுத்துவதின் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகரித்தல்" என்னும் திட்டத்தை நமது மையத்திற்கு வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் டிசம்பர் 2009 முதல் ராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கான கால வரையறை ஆறு மாதங்கள் ஆகும். இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பல்வேறு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சிகள் நடத்தவும், மிளகாய் பயிருக்கான இயற்கைவழி சாகுபடி நுட்பங்களைத் தொகுத்து வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.






# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**காம்பாஸ் திட்டம்**

இந்தத் திட்டம் நெதர்லாந்திலுள்ள இடிசி (ETC) நிறுவனத்தின் உதவியுடன், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், தீவனப்புல் சாகுபடி மற்றும் பயன்பாடு குறித்து காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில், விவரச் சேகரிப்பு நடத்தப்பட்டது. விவசாயத்தில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் சீர்காழி மற்றும் மயிலாடுதுறை தாலுக்காவில் விவர ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சமூக மண்புழு உரத் தயாரிப்பகம் மற்றும் தாவரக் கரைசல் தயாரிப்பகத்தின் விவரங்களும், செயல்முறைகளும் ஆவணம் செய்யப்பட்டன. ஆராய்ச்சி இயக்குநர் கே. விஜயலட்சுமி அவர்கள் டிசம்பர் 14 - 18ஆம் தேதிகளில், நெதர்லாந்தில் நடைபெற்ற காம்பாஸ் திட்டத்தின் சர்வதேச மேலாண்மைக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டார். டிசம்பர் 19ஆம் தேதியன்று, நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கடிநெல்வயல் கிராமத்தில் விவசாயிகள் - விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது.

**பல்வகைமைப் பாதுகாப்பு, பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல் மற்றும் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு - ஒரு தற்சார்பு முக்கோணம்**

இந்தத் திட்டம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் (UNDP-GEF) உதவியுடன் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நவம்பர் 2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், பெண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு குறித்து அல்லிவிளாகம் கிராமத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. தஞ்சாவூரிலுள்ள ஐஐசிபிடி (IICPT) மையத்திற்கு சென்று உணவு பொருட்களைப் பதப்படுத்தும் முறைகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர்களுக்கு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்து 14 பயிற்சிகள் நடத்தப்பட்டன. மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கடிநெல்வயல் மற்றும் ஆதமங்கலம் கிராமப் பயனீட்டாளர்களுக்கு முறையே இயற்கைவழி வேளாண்மை மூலம் வருவாய் ஈட்டுதல் மற்றும் கால்நடைப் பராமரிப்பில் தீவனப் பயிரின் பங்கு என்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்கள் ஒன்பது பாரம்பரிய நெல் ரகங்களின் சாகுபடி மற்றும் பாதுகாப்பில் ஈடுப்பட்டுள்ளனர். நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடலோர கிராமங்களில் “இயற்கைவழி பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடி” குறித்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டு நிலை குறித்த விவரச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**இயற்கைவழி வேளாண்மை மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்**

இந்தத் திட்டம் மும்பையிலுள்ள ஜாம்செட்ஜி டாடா டிரஸ்டின் (JTT) உதவியுடன் காஞ்சிபுரம், ராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மே 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 20 விவசாயிகள் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இயற்கைவழி விதை உற்பத்திக்காக நான்கு மாவட்டங்களிலிருந்தும் 178.38 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டு நெல் ரகங்கள், உளுந்து, பச்சை பயறு, எள், சோளம் போன்றவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலுள்ள விதை உற்பத்தி வயல்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இடுபொருள் உதவி மற்றும் பயிர் கடன் திட்டங்களின் கீழ் சுமார் 328.57 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் நெல் ரகங்கள், நிலக்கடலை, மிளகாய், கொள்ளு, உளுந்து, எள், கருங்கன்னி பருத்தி போன்றவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன. காஞ்சிபுரம், ராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மாதிரி விளக்க வயல்கள் உருவாக்கப்பட்டு பல்வேறு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர்களுக்கு 15 குறுகிய காலப் பயிற்சிகளும், இரண்டு பயிற்சியாளர் பயிலரங்குகளும் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சிகளில் சுமார் 250 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நாகப்பட்டினம் மாவட்டப் பயனீட்டாளர்கள் சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் மற்றும் மேட்டுபாளையம் பகுதிகளிலுள்ள இயற்கைவழி பண்ணைகளுக்கு அழைத்து செல்லப் பட்டனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் தாவரக் கரைசல் தயாரிப்பகம் ஒன்று கட்டுவதற்காக நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**இயற்கைவழி வேளாண்மைப் பயிற்சிகளின் மூலம் விவசாயிகளின் திறனை மேம்படுத்தும் திட்டம்**

சென்னையிலுள்ள வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் இந்தத் திட்டம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆகஸ்டு 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர்களுக்கு இயற்கைவழி நெல் சாகுபடி மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. பத்து விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விவசாயப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இயற்கைவழி நெல் சாகுபடியில் பயனீட்டாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தொழில்நுட்பங்கள் குறித்த விவரங்கள் பதிவு செய்யப்பட்டன. டிசம்பர் 11ஆம் தேதியன்று, நபார்ட் வங்கியின் துணை மேலாளர் திரு. வேணுகோபால் அவர்கள் திட்டத்தின் பயனீட்டாளர்களுடன் திட்டத்தின் மூலம் அவர்கள் கற்றுக்கொண்ட தொழில்நுட்பங்கள் குறித்தும், அவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடினார். இந்தக் கூட்டத்தில் ஏழு விவசாயிகள் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டம்**

நமது மையம், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டத்தை ஜனவரி 2009 முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் இரண்டாவது பாகம் செப்டெம்பர் 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதாந்திர

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

சங்கக் கூட்டங்கள் நடைபெற்றன. ஆலங்காடு பாசன வாய்க்கால் சுமார் 3.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. மயிலாடுதுறையிலுள்ள வேளாண் பொறியியல் துறையின் உதவியுடன் பண்ணை குட்டை ஒன்று தோண்டப்பட்டுள்ளது. அக்டோபர் 26ஆம் தேதியன்று, கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு நெல் விதைகள், CO3 தீவனப்புல் கரணைகள் மற்றும் உயிர்உரங்கள் வழங்கப்பட்டன. சமூக மண்புழு உற்பத்திக் கூடத்திற்கு உருள்தொட்டிகள் மற்றும் தள்ளுவண்டிகள் (Trolley) வழங்கப்பட்டன.

### தற்சார்பு வேளாண்மையை வலுப்படுத்துவதின் மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் - மானாவாரி சாகுபடிக்கான திட்டம்

ஃபோர்ட் மற்றும் ஹீவாஸ் நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் விவரச் சேகரிப்புகள் மேற்கொள்ளப் பட்டன. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுக்காவிலுள்ள ஆறு கிராமங்களிலிருந்து 116 பயனீட்டாளர்களும் 343 ஏக்கர் நிலமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில், நத்தம் தாலுக்காவிலுள்ள மூன்று கிராமங்களைச் சேர்ந்த 88 விவசாயிகளிடமிருந்து 435 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திட்ட இயக்குனர் எஸ். ஆறுமுகசாமி அவர்கள் திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்களை முறையே அக்டோபர் 13 மற்றும் 24ஆம் தேதிகளில் பார்வையிட்டார். திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள களத்துப்பட்டி கிராமப் பயனீட்டாளர்கள் மூன்று பேருக்கு மண்புழு உரத் தயாரிப்பு மற்றும் தேனீ வளர்ப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணையில் 83 பாரம்பரிய நெல் ரகங்கள் விதைப் பெருக்கத்திற்காகச் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஏ.டி.டி. - 43 நெல் ரகம் இரண்டு ஏக்கரில் செம்மை நெல் சாகுபடி முறையில் பயிரிடப்பட்டுள்ளது. தக்காளி, கொத்தவரை, வெண்டை போன்ற காய்கறி பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. நிழல் வலைக் கூடத்தில் கொத்தமல்லி, புதினா, பட்டாணி, கொத்தவரை போன்றவை வளர்க்கப்படுகின்றன. மாதுளை மற்றும் சப்போட்டா மரக் கன்றுகள் 20 சென்டில் நடவு செய்யப்பட்டுள்ளன. மண்புழு உரம் மற்றும் மக்கு உரத் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### கபார்ட் கூட்டம்

அக்டோபர் 12ஆம் தேதியன்று, “இயற்கையை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரமும் அதற்கு பொருத்தமான தொழில்நுட்பங்களும்” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கபார்ட் துணை குழு கூட்டத்தில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில், பல்வேறு திட்டங்கள் குறித்தும் குறிப்பாக, தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் (NREGA) மற்றும் இயற்கை வள ஆதாரங்கள் மற்றும் வாழ்வாதார மேலாண்மை திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

### இயற்கைவழி வேளாண்மைக் கண்காட்சி

நவம்பர் 18ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை, பயோ ஃபாக் இந்தியா (Bio Fach India) என்ற தலைப்பில் சர்வதேச இயற்கைவழி கண்காட்சி மும்பையில் நடைபெற்றது. இதில் பல்வேறு இயற்கைவழி விளைபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், இடுபொருட்கள் போன்றவை பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கண்காட்சியில் சிக்கிம், சட்டிஷ்கர், கர்நாடகம், மிசோராம் மாநிலங்களின் வேளாண் துறையினர் கலந்து கொண்டனர். நமது மையத்திலிருந்து 13 விவசாயப் பயனீட்டாளர்களும் மூன்று பணியாளர்களும் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டனர். இதை தொடர்ந்து, விவசாயிகள் புனேயிலுள்ள இயற்கைவழி பண்ணைகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

### பெங்களூருவில் நடைபெற்ற கூட்டம்

சர்வதேச வைத்தியர்கள் மாநாடு நவம்பர் 19 மற்றும் 20ஆம் தேதிகளில், பெங்களூருவிலுள்ள எப்.ஆர்.எல்.எச்.டி. நிறுவனத்தினால் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 30 பாரம்பரிய வைத்தியர்கள் கலந்து கொண்டனர். இதில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் சார்பாக காம்பாஸ் திட்ட ஆசிய ஒருங்கிணைப்பாளர் கே. விஜயலட்சுமி அவர்களும், ஆ.வே பால சுப்பிரமணியன் அவர்களும், எம். சுரேஷ் அவர்களும் கலந்து கொண்டனர். ஆ.வே. பால சுப்பிரமணியன் அவர்கள் 19ஆம் தேதியன்று பிற்பகல் நடைபெற்ற பாரம்பரிய வைத்திய முறைகள் சார்ந்த உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கை முறை என்ற தலைப்பிலான கலந்துரையாடல் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினார்.

### இயற்கைவழி வேளாண்மைக் கொள்கை உருவாக்கப் பயிலரங்கு

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், காம்பாஸ் திட்டத்தின் கீழ் பாரம்பரிய அறிவு மற்றும் வேளாண்மை என்ற தலைப்பில் கொள்கை உருவாக்கப் பயிலரங்கு ஒன்றை நடத்தியது. இந்தப் பயிலரங்கு நவம்பர் 25 மற்றும் 26ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. இதில் இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த காம்பாஸ் திட்ட உறுப்பினர்களும், காம்பாஸ் சர்வதேச மையத்தின் பிரதிநிதிகளும் தொழில்நுட்ப ஆலோசகரும் கலந்து கொண்டனர். கொள்கை உருவாக்க முறைகளைத் தெரிந்து கொண்டு, பாரம்பரிய அறிவு மற்றும் வேளாண்மை என்ற தலைப்பில் கொள்கை சுருக்கம் (Policy Brief) ஒன்றை உருவாக்குவதே இந்தப் பயிலரங்கின் முக்கிய நோக்கமாகும். இந்தப் பயிலரங்கில் தேசிய மற்றும் மாநில அரசின் வேளாண் கொள்கைகள் பற்றி விவாதிக்கப்பட்டன. இதை தொடர்ந்து குழு விவாதமும் கொள்கை உருவாக்கச் செயல்முறையும் மேற்கொள்ளப்பட்டது.

### இயற்கைவழி வேளாண்மை விழா

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தினால் காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பத்து இயற்கைவழி வேளாண்மை விழாக்கள் நடத்தப்பட்டன. இயற்கைவழி விவசாயிகளை ஊக்கப்படுத்தி இயற்கைவழி வேளாண்மை குறித்து கிராம மக்களிடையே கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த விழாக்களின் முக்கிய நோக்கமாகும். இந்த விழாக்களில் சுமார் 768 விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், வங்கி மேலாளர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் முக்கிய விருந்தினர்களாகக் கலந்து கொண்டு விழாக்களைச் சிறப்பித்தனர்.


**முழு வீச்சில் இயற்கைவழி பொருட்கள் விற்பனை**

இயற்கைவழி வேளாண்மைத் தரச்சான்று பெற்ற பல்வேறு விளைபொருட்கள் ஆரோக்கியம் ஆர்கானிக்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தில் விற்பனைக்கு உள்ளன. இந்தப் பொருட்களை வாங்க விரும்புபவர்கள் 044-2743 0635 / 2743 1971 என்ற தொலைபேசி எண்களில் அல்லது arogyamorganics@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

*மேலும் விவரங்களுக்கு*

www.arogyamorganics.com என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

## புத்தகங்களும் வீடியோ படங்களும்

# பூச்சிக்கொல்லிகள்

### சில முக்கிய தகவல்கள்




பூச்சிமருந்துகளைப் பெருமளவில் பயன்படுத்தும் பல விவசாயிகளுக்கு பூச்சிமருந்துகளைப் பற்றிய அடிப்படைத் தகவல்கள் கூடத் தெரிந்திருப்பதில்லை. பூச்சிமருந்துகளின் பாதுகாப்பான பயன்பாட்டிற்குச் செயல் திட்டங்களை நிறை வேற்ற பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இந்நிறுவனங்களுக்கும் பூச்சிக்கொல்லிகள் பற்றிய விவரங்கள் தேவைப்படுகின்றன. நுகர்வோர், விவசாயிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குப் பயன்படும் வகையில் பூச்சிமருந்துகளைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை இந்த கையேட்டில் காணலாம்.

**இந்தக் கையேட்டைப் பெற விரும்புவோர் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

## வருகையாளர் பதிவேடு

- *அக்டோபர் 20ஆம் தேதியன்று, காந்தி கிராமப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்பு துறையின் பேராசிரியர் டாக்டர் டி.டி. ரங்கநாதன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *அக்டோபர் 21ஆம் தேதியன்று, தஞ்சாவூரிலுள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திலுள்ள பாரம்பரிய மூலிகை கால்நடைப் பராமரிப்பு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறையைச் சேர்ந்த டாக்டர். நடேசன் புண்ணியமூர்த்தி அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *அக்டோபர் 27ஆம் தேதியன்று, இந்திய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகத்தின் ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை வைத்தியம், யுனானி, சித்த மற்றும் ஹோமியோபதி மருத்துவத் துறையின் (AYUSH) இணை செயலாளர் டாக்டர் சஞ்சய் குமார் பாண்டா அவர்களும் திருமதி. அனிதா தாஸ், இ.ஆ.ப. (ஓய்வு), ஆயுஷ் செயலாளர் அவர்களும், கர்நாடக அரசின் ஆயுஷ் துறையின் இயக்குனர் டாக்டர். ஜிஎன். ஸ்ரீகண்டய்யா, ஐ.எப்.எஸ். அவர்களும், சென்னையிலுள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் டி. அரவிந்த் மற்றும் சென்னை குழந்தைகள் மருத்துவமனையின் வைத்தியர் எம். ராதிகா அவர்களும் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *நவம்பர் 22ஆம் தேதியன்று, வழக்கறிஞர்கள், திரு. டி. ராமலிங்கம் அவர்களும், திருமதி. சுதா ராமலிங்கம் அவர்களும் மற்றும் செல்வி. அகிலா அவர்களும் சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *நவம்பர் 24ஆம் தேதியன்று, காம்பாஸ் சர்வதேச ஒருங்கிணைப்பு மையத்திலிருந்து திரு. மார்க் லெமரிங் அவர்களும், திருமதி. மரைக்கே கிரேய்காம்ப் அவர்களும் நமது சென்னை அலுவலகம், சுக்கன் கொல்லை பண்ணை, வேடந்தாங்கல் கிராமத்திலுள்ள வேப்ப விதை அரவை ஆலை மற்றும் செங்கல்பட்டு அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.*
- *டிசம்பர் 8ஆம் தேதியன்று, லண்டனிலுள்ள லண்டன் பொருளாதார பள்ளியிலிருந்து (London School of Economics) டாக்டர் ஹரிப்பிரியா நரசிம்மன் அவர்கள் வந்திருந்தார்.*

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862

மின்னஞ்சல் : info@ciks.org இணையத்தளம் : www.ciks.org